உ
சிவமயம்

# செய்தி மடல்

அகில இலங்கை இந்து மாமன்றம்
ALL CEYLON HINDU CONGRESS

விரோதி வருடம்
புரட்டாதித் திங்கள்
15ம் நாள்
01.10.2009

தலைமையகம் : இல. 91/5, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை, கொழும்பு-02. இலங்கை
தொலைபேசி : 011 2434990 - தொலைநகல் : 011 2344720, மின்னஞ்சல்: hinducongress@gmail.com

**“சகோதர சகோதரிகளின் கண்ணீர் துடைக்க எம்மாலான உதவி செய்வோமாக”**

## இந்த மடலில்....




லண்டனில் நடைபெற்ற 12ஆவது சைவ மாநாட்டில் மாமன்றப் பொதுச் செயலாளர் திரு. கந்தையா நீலகண்டன் உரையாற்றுகிறார். (பக்கம் - 2)

## மாமன்றம் வாழ்த்துகிறது



கடந்த செப்டெம்பர் 28ம் திகதியன்று அகவை எழுபதை நிறைவு செய்துள்ள கனடிய இந்து நிறுவனத்தின் இணைப்பாளரான திரு. கே. வெங்கட்ராமன் அவர்களுக்கு அகில இலங்கை இந்து மாமன்றத்தின் சார்பாக இதய பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இவர் நல்ல சுக நலத்துடன் வாழ்ந்து, சமூக, சமய, ஆன்மீகப் பணிகளை மேலும் சிறப்பாகத் தொடரவேண்டும் என அருள்மிகு சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

சுனாமி அனர்த்தத்தின்போது பாதிக்கப்பட்ட தம்பிலுவில் திருநாவுக்கரசு நாயனார் குருகுலக் கட்டிடத்தை புனரமைத்துக் கட்டுவதற்கு கனடிய இந்து நிறுவனம் மாமன்றத்தின் ஊடாக நிதியுதவி செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மாமன்றத்தின் தீபாவளிச் செய்தி

எங்கள் வாழ்வின் இருளை அகற்றி தெய்வீக ஒளி ஏற்றப்பட்டு வாழ்வு வளம்பெற – எதிர்காலம் சிறப்புற இறையருள் வேண்டிப் பிரார்த்திக்க வேண்டிய திருநாள் தீபாவளி.

தங்களது தாய் நாட்டிலே சுதந்திரத்துடன் – சகல உரிமைகளுடன் நிம்மதியாக வாழ வேண்டும் என்பதே மக்களின் மனத்துடிப்பு. 19ம் நூற்றாண்டில் வாழ்ந்த பிரபல ஆராய்ச்சியாளரும் அறிஞருமான சேர் வில்லியம் ஜேம்ஸ் என்பவர் இந்து மக்களது வரலாற்றை அகழாய்வு செய்து “நினைவுக்கும் அப்பாற்பட்ட காலம் தொடக்கம் இந்து மக்கள் இந்நாட்டில் வாழ்ந்திருக்கிறார்கள்” என்றும், சிங்கள வரலாற்று ஆராய்ச்சியாளரான கலாநிதி போல் பீரிஸ் என்பவர் “விஜயன் இலங்கைக்கு வந்து சேருவதற்கு முன்பதாக இலங்கையிலே இந்தியாவும் போற்றி வணங்கிய நான்கு ஈஸ்வரத் தலங்கள் சிவ வழிபாட்டுக்காக இருந்தன. அவையாவன திருக்கேதீஸ்வரம், முன்னேஸ்வரம், தொண்டீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் என்பனவாகும்” என்றும் சொல்லியிருக்கிறார். அத்தகைய பழம்பெரும் வரலாறு மிக்க இனத்தைச் சேர்ந்தவர்கள் எமது மக்கள்.

மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவராகச் சொல்லப்படும் திருமந்திரம் தந்த திருமூலநாயனார் இந்த நாட்டை “சிவபூமி” என்று சிறப்பித்துக் கூறியிருக்கிறார். இச்சிவபூமியில் இன்று எமது உடன்பிறப்புகளின் நிலைமை மிகவும் இக்கட்டான வேதனைக்குரியதாக இருக்கிறது.

(தொடர்ச்சி 2ம் பக்கம்)

## தீபாவளி தினத்தன்று பிரார்த்தனை

அகில இலங்கை இந்து மாமன்றம் அதன் அங்கத்துவ சங்கங்களுடனும், ஏனைய இந்து நிறுவனங்களுடனும் இணைந்து தீபாவளி தினமாகிய இம்மாதம் 17ம் திகதி சனிக்கிழமையன்று காலை 10.00 மணிமுதல் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் பிரார்த்தனை நிகழ்வொன்றை நடத்தவிருக்கிறது.

பலவித இழப்புகளுக்கும் இடப்பெயர்வுகளுக்கும் மத்தியில் துயரங்களுடன் வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழ் மக்களுக்கு விமோசனமும், வாழ்வில் நிம்மதியும், மகிழ்ச்சியும் அமைந்த சிறப்பான எதிர்காலத்திற்கு இறையருளை வேண்டி இந்தப் பிரார்த்தனை நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் அமெரிக்கா, ஹவாய் சைவ ஆதீனத்தைச் சேர்ந்த தவத்திரு ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுவார்.

இந்து மக்கள் அனைவரையும் பிரார்த்தனை நிகழ்வில் கலந்து கொள்ளும்படி மாமன்றம் கேட்டுக்கொள்கின்றது.

**மாமன்றத்தின் புதிய இணையத்தள முகவரி:**
www.hinducongress.lk

**வாழ்த்து**



சீலமுந்திருவு மோங்கச் சிறப்புறு செல்வம் மேவச்
சாலவே சலனமெல்லாம் தரணிமேற் சாய்ந்து வீழ
ஆலமதுண்ட அண்ணல் அருளினா லறங்க ளோங்க
ஞானமே லுயிர்களெல்லாம் நலமுடனினிது வாழ்க!



**விரோதி வருடம் புரட்டாதித் திங்கள் 15ம் நாள் (01.10.2009)**

# மாமன்றத்தின் குரல்

உங்கள் அனைவருக்கும் எங்கள் அன்பு வணக்கம். மாமன்றத்தின் மற்றுமொரு செய்தி மடல் ஊடாக உங்களை மீண்டும் சந்திக்கிறோம்.

தொடர்ந்து நடந்துவரும் மாமன்றத்தின் சமய, ஆன்மீக, சமூகநலப் பணிகளைப் பற்றி நீங்கள் அறிந்திருப்பீர்கள். கடந்த செப்டெம்பர் மாதம் 4ம் திகதி முதல் 6ம் திகதிவரை மலையகத்திலுள்ள இந்து நிறுவனங்களுடன் இணைந்து ஆன்மீக எழுச்சிக் கருத்தரங்குகளை மாமன்றம் ஏற்பாடு செய்து நடத்தியிருந்தது.

வவுனியா நலன்புரி முகாம்களில் தங்கியிருந்த இந்துக் குருமார்களையும், அவர்களின் குடும்பத்தினரையும் மாமன்றம் பொறுப்பேற்று அவர்களது சொந்த இடங்களுக்கு அனுப்பிவைத்திருந்தது. இவர்களுள் 8 குடும்பங்களைச் சேர்ந்த 30 பேர் மன்னார் திருக்கேதீஸ்வரத்திலுள்ள மகா சிவராத்திரி மடத்தில் தங்கவைக்கப்பட்டு பராமரிக்கப்படுகின்றனர்.

மாமன்றத்தால் பொறுப்பேற்கப்பட்ட முதியோர்களும் மன்னார் திருக்கேதீஸ்வரத்தில் தங்கவைக்கப்பட்டு மாமன்றத்தால் பராமரிக்கப்பட்டு வருகிறார்கள். வவுனியா நலன்புரி முகாம்களிலுள்ள ஆதரவற்ற சிறுவர்களையும் பொறுப்பேற்று பராமரிப்பதற்கான ஒழுங்குகளையும் மாமன்றம் செய்து வருகிறது.

இதுதவிர, வவுனியா நலன்புரி முகாம்களில் பலவித கஷ்டங்களின் மத்தியில் வாழ்ந்து வருபவர்களுக்கு மாமன்றம் தொடர்ந்தும் உதவி வருகிறது. மாமன்றத்தின் இந்த மனிதநேயப் பணியில் இந்து மக்கள் அனைவரும் இணைந்து கொண்டு ஆதரவும், உதவியும் தரவேண்டும் என்பதே எங்கள் விருப்பமும் வேண்டுகோளுமாகும்.

நாட்டின் அசாதாரண சூழ்நிலைகள் முற்றாகவே நீங்கி, மக்கள் அனைவரும் தங்கள் சொந்த இடங்களுக்குச் சென்று – குடும்பத்தவர்களுடன் இணைந்து – நிம்மதியுடனும், மகிழ்ச்சியுடனும் வாழ வேண்டும்; அதற்கானதொரு ஒளிமயமான எதிர்காலம் விரைவில் அமையவேண்டும். இதற்காக அருள்மிகு சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமானைப் பிராத்திப்போமாக.

**கந்தையா நீலகண்டன்**
*பொதுச் செயலாளர், அகில இலங்கை இந்து மாமன்றம்.*

## "தெய்வத்திருமகளின் வாழ்வும் பணிகளும்" லண்டனில் வெளியீடு

பிரித்தானிய சைவத் திருக்கோயில்கள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் செப்டெம்பர் 12ம், 13ம் திகதிகளில் லண்டனில் நடந்த 12வது சைவ மாநாட்டின் இரண்டாவது நாள் நிகழ்வுகள் உயர்வாசல் குன்று முருகன் ஆலயத்தின் "தெய்வத்திருமகள் தங்கம்மா அப்பாக்குட்டி" அரங்கில் இடம்பெற்றபோது மாமன்றத்தின் வெளியீடான "தெய்வத் திருமகளின் வாழ்வும் பணிகளும்" என்ற நூலும் வெளியிட்டு வைக்கப்பட்டது. மாநாட்டில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட மாமன்றப் பொதுச் செயலாளர் திரு. கந்தையா நீலகண்டன் நூலை வெளியிட்டு வைத்து உரையாற்றினார். நூல் வெளியீட்டின்போது கிடைத்த இலாப நிதியைச் சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களது வாழ்க்கை வரலாற்றை ஆய்வுசெய்து வரும் யாழ். பல்கலைக்கழக முதுமாணிப் பட்டதாரி மாணவிக்கு வழங்குவதற்கு மாமன்றம் தீர்மானித்துள்ளது.

## தீபாவளிச் செய்தி (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வன்னியில் நலன்புரி முகாம்களில் வாழும் மக்கள் தாமதமின்றி தங்கள் இல்லங்களில் குடியேற வழிவகுக்கப்பட வேண்டும் என்பதனை மாமன்றம் தொடர்ந்தும் வற்புறுத்தி வருகின்ற அதேவேளையில் குறிப்பாக சிவாச்சாரியார்கள் குடும்பங்களுக்கும், முதியோர்களுக்கும், சிறுவர்களுக்கும் எம்மாலாக உதவிகளை செய்து வருகிறோம். புனர்வாழ்வு முகாம்களில் இருக்கும் 250 பிள்ளைகளை இரத்மலானை கொழும்பு இந்துக் கல்லூரியில் வைத்து ஆதரவு வழங்குமாறு நீதி அமைச்சு விடுத்த வேண்டுகோளை ஏற்று மாமன்றம் நடவடிக்கை எடுத்து வருகின்றது. மேலும் வன்னியிலிருந்து யாழ். பல்கலைக்கழகத்திற்கு மீண்டும் வந்து சேர்ந்த இடம்பெயர்ந்த மாணவர்கள் 56 பேருக்கு வாழ்க்கை நெறிப்படுத்தல் முன் பண உதவியும் செய்து வருகிறோம். இப்படி பல வழிகளில் மக்களுக்கு உதவ மாமன்றம் சமூகநலத் திட்டங்களை வகுத்து செயற்படுத்தி வருகின்றது. மாமன்றத்தின் இப் பணிகளில் இணையுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்து மக்கள் அனைவரும் எதிர்வரும் தீபாவளி தினத்திலே அர்த்தமற்ற கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளாமல் பிரார்த்தனையில் ஈடுபடவேண்டும் என கேட்டுக்கொள்ளுகின்றோம். எந்தவொரு இந்து மகனுக்கும் செலவழிக்க பணமிருந்தால் அதை இன்றைய காலகட்டத்தில் அல்லற்படும் பல்லாயிரக்கணக்கான சகோதர சகோதரிகளின் நிவாரணத்திற்காக வழங்கி உதவவேண்டும். அவர்களின் கண்ணீரை துடைப்பது எங்கள் அனைவரினதும் கடமையாகும்.

தீபாவளி தினமான இம்மாதம் 17ம் திகதியன்று பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறும் பிரார்த்தனை வைபவத்தில் கலந்து கொள்ளும்படியும் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

சொல்லொண்ணா வேதனையில் வாடும் எங்கள் மக்களது வாழ்வில் இணைந்திருக்கும் துன்ப இருளானது விரைவில் அகன்று அவர்களுக்கு மகிழ்ச்சியும் நிம்மதியும் விமோசனமும் அமைந்த ஒளிமயமானதொரு எதிர்காலம் உதயமாகவேண்டும் என இத் தீபாவளி திருநாளில் அருள்மிகு சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

**வி. கயிலாசபிள்ளை**
*தலைவர்*



**கந்தையா நீலகண்டன்**
*பொதுச் செயலாளர்*

## நூல்கள் வழங்கும் வைபவம்

அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவர் திரு. வி. கயிலாசபிள்ளை குடும்பத்தினரின் நிதியுதவியுடன் மாமன்றத்தினால் வெளியிடப்பட்ட அச்சுவேலி சிவஸ்ரீ ச. குமாரசாமிக் குருக்கள் அவர்கள் இயற்றிய சிவாகமசேகரம் பிரதிஷ்டா விதி (முதலாம் பாகம்) சிவலிங்கப் பிரதிஷ்டா விதி (இரண்டாம் பாகம்) ஆகிய இரு நூல்களையும் சிவாச்சாரியப் பெருமக்களுக்கு வழங்கும் வைபவம் செப்டம்பர் 12ம் திகதி சனிக்கிழமையன்று பிற்பகல் யாழ்ப்பாணம் நல்லூரிலுள்ள மாமன்றப் பிராந்திய அலுவலகத்தில் இடம்பெற்றது.

சர்வதேச இந்துமத குருபீடாதிபதி சிவஸ்ரீ ச. மகேஸ்வரக் குருக்கள் தலைமையில் நடைபெற்ற இந்த வைபவத்தில், சிவஸ்ரீ வை. விருத்தகிரீஸ்வரக் குருக்கள் வரவேற்புரையையும், நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அருளுரையையும், இணுவில் தர்மசாஸ்தா குருகுல அதிபர் சிவஸ்ரீ தா. மகாதேவக் குருக்கள் ஆசியுரையையும் வழங்கினார்கள்.

மாமன்ற உபதலைவரும், ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தான தலைவருமான செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றினார். இந்நிகழ்வில் சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத் தலைவர் பிரம்மஸ்ரீ ப. மனோகரக் குருக்கள், யாழ். பல்கலைக்கழக சமஸ்கிருத விரிவுரையாளர் பிரம்மஸ்ரீ கிருஷ்ணானந்த சர்மா ஆகியோர் கௌரவ விருந்தினர்களாக கலந்து கொண்டார்கள்.

சமூகசேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் கௌரவ டக்ளஸ் தேவானந்தா அவர்களும் கலந்துகொண்டு உரையாற்றினார். சிவஸ்ரீ க. வைத்தீஸ்வரக் குருக்கள் வழங்கிய நன்றியுரையுடன் நிகழ்வு இனிதே நிறைவுபெற்றது.

# மலையகத்தில் ஆன்மீக எழுச்சிக் கருத்தரங்குகள்

மலையகத்திலுள்ள சில இந்து நிறுவனங்கள், மஸ்கெலியா இந்து மாமன்றத்தின் ஊடாக விடுத்திருந்த வேண்டுகோளுக்கு இணங்க அகில இலங்கை இந்து மாமன்றம், மலையக இந்து நிறுவனங்களுடன் இணைந்து ஏற்பாடு செய்திருந்த ஆன்மீக எழுச்சிக் கருத்தரங்குகள் கடந்த செப்டம்பர் 4ம் திகதி முதல் 6ம் திகதி வரை மலையகப் பகுதிகளில் நடைபெற்றன. இந்த நிகழ்ச்சிகளில் சிறப்புச் சொற்பொழிவாற்றுவதற்காக திண்டுக்கல் வள்ளலார் குருகுலத்தின் மடாதிபதி தவத்திரு யோகானந்த சுவாமிகளும், மதுரை யோகாமிர்தம் அறக்கட்டளை நிறுவனத்தைச் சேர்ந்த ஞானச்செல்வி அமிர்தமும் இந்தியாவிலிருந்து வருகை தந்திருந்தனர்.

மாத்தளை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தான பரிபாலன சபையுடன் இணைந்து நடாத்திய கருத்தரங்கு தேவஸ்தான கல்யாண மண்டபத்தில் 04.09.2009 வெள்ளிக்கிழமை காலை 9.45 மணியளவில் ஆரம்பமாகி பிற்பகல் 1.30 மணிவரை இடம்பெற்றது. நிகழ்வுக்கு தேவஸ்தான பரிபாலன சபைத் தலைவர் திரு. ச. சந்திரசேகரன் தலைமை வகித்தார். தவத்திரு யோகானந்த சுவாமிகள், ஞானச்செல்வி அமிர்தம் ஆகியோரது சொற்பொழிவுகளுடன் ஆன்மீக வினாவிடையும் இடம்பெற்றது. மாமன்ற உதவிச் செயலாளர் திரு. ந. கார்த்திகேயன் வழங்கிய நன்றியுரையுடன் நிகழ்வுகள் நிறைவுபெற்றன.

பேராதனைப் பல்கலைக்கழக குறிஞ்சிக் குமரன் ஆலய பொறுப்பாண்மைக் குழுவுடன் இணைந்து நடாத்திய கருத்தரங்கு மேற்படி ஆலய மண்டபத்தில் 04.09.2009 வெள்ளிக்கிழமை மாலை 5.45 மணியளவில் ஆரம்பமாகி நடைபெற்றது. மாமன்றப் பொதுச் செயலாளர் திரு. கந்தையா நீலகண்டன் அவர்களது அறிமுகவுரையுடன், தவத்திரு யோகானந்த சுவாமிகள், ஞானச்செல்வி அமிர்தம் ஆகியோரது சொற்பொழிவுகளும் இடம்பெற்றன. ஆலய பொறுப்பாண்மைக் குழுவின் பொதுச் செயலாளர் திரு. ஆர். மகேஸ்வரன் வழங்கிய நன்றியுரையுடன் நிகழ்வுகள் நிறைவுபெற்றன.

நாவலப்பிட்டி இந்து மன்றம், நாவலப்பிட்டி ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய பரிபாலன சபை என்பனவற்றுடன் இணைந்து நடாத்திய கருத்தரங்கு நாவலப்பிட்டி இந்து கலாசார மண்டபத்தில் 05.09.2009 சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் ஆரம்பமாகி பிற்பகல் 2.00 மணிவரை இடம்பெற்றது. நிகழ்வுக்கு நாவலப்பிட்டி இந்து மன்றத் தலைவர் திரு. ஆர். இராஜேந்திரன் தலைமை வகித்தார். தவத்திரு யோகானந்த சுவாமிகள், ஞானச்செல்வி அமிர்தம் ஆகியோரது சொற்பொழிவுகளுடன் ஆன்மீக வினாவிடை, நடன நிகழ்ச்சி என்பன இடம்பெற்றன. மாமன்ற உதவிச் செயலாளர் திரு. ந. கார்த்திகேயன் வழங்கிய நன்றியுரையுடன் நிகழ்வுகள் நிறைவுபெற்றன.

ஹப்புத்தளை சைவ இளைஞர் மன்றத்துடன் இணைந்து நடாத்திய கருத்தரங்கு 06.09.2009 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் ஆரம்பமாகி நண்பகல் 12.00 மணிவரை ஹப்புத்தளை இந்து கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது. நிகழ்வுக்கு சைவ இளைஞர் மன்றத்தின் தலைவர் திரு. என். சின்னசாமி தலைமை தாங்கினார். தவத்திரு யோகானந்த சுவாமிகள், ஞானச்செல்வி அமிர்தம் ஆகியோரது சொற்பொழிவுகள் இடம்பெற்றன. மாமன்ற உதவிச் செயலாளர் திரு. ந. கார்த்திகேயன் வழங்கிய நன்றியுரையுடன் நிகழ்வுகள் நிறைவுபெற்றன.

கிறீன் பீல்ட்டு எஃப்.எல்.ஒ. சபையுடன் இணைந்து நடாத்திய கருத்தரங்கு கிறீன்பீல்ட் எஃப்.எல்.ஒ. மண்டபத்தில் 06.09.2009 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் ஆரம்பமாகி மாலை 4.30 மணிவரை இடம்பெற்றது. நிகழ்வுக்கு கிறீன் பீல்ட்டு உயிரியல் தோட்ட முகாமைத் தலைவர் திரு.எஸ்.முத்துசாமி தலைமை வகித்தார். தவத்திரு யோகானந்த சுவாமிகள், ஞானச்செல்வி அமிர்தம் ஆகியோரது சொற்பொழிவுகளுடன் ஆன்மீக வினாவிடை, அறநெறிக் கீதம், பேச்சு, சிறப்பு நடனம் என்பனவும் இடம்பெற்றன. மாமன்ற உதவிச் செயலாளர் திரு. ந. கார்த்திகேயன் வழங்கிய நன்றியுரையுடன் நிகழ்வுகள் நிறைவுபெற்றன.

மேற்படி கருத்தரங்குகளில் கலந்துகொண்ட அனைவருக்கும் மாமன்ற வெளியீடுகளான இந்து ஒளி, இந்து நாகரிகம், இந்து மக்களுக்கு ஒரு கையேடு, சிவவழிபாட்டு மலர் மற்றும் அப்பியாசப் புத்தகங்கள் என்பன இலவசமாக வழங்கப்பட்டன.

இந்த கருத்தரங்கு நிகழ்ச்சிகள் தொடர்பான முன்னேற்பாடுகளை மாமன்றப் பொதுச் செயலாளர் திரு. கந்தையா நீலகண்டன், மாமன்ற சமய விவகாரங்கள் குழுத் தலைவர் திரு. க. ஜெகதீசன், மாமன்ற உதவிச் செயலாளர் திரு. ந. கார்த்திகேயன் ஆகியோர் செய்திருந்தனர். மலையகப் பயணம் மற்றும் நிகழ்வுகளின் போது மூன்று தினங்களும் திரு. ந. கார்த்திகேயன் உடனிருந்து நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்து சிறப்பாக நடத்தியிருந்தார். இவருக்கு உதவியாக இரத்மலானை மாணவர் இல்ல சிவதொண்டர் அணியைச் சேர்ந்த செல்வன் மனோகரன் தனஞ்சயன், செல்வன் ஆறுமுகதாஸ் குணசீலன், செல்வன் தர்மராஜா யகேந்திரநாத் ஆகியோர் உடனிருந்து பணியாற்றினர்.

## மாமன்றத்தால் பராமரிக்கப்படும் முதியோர்கள்

கடந்த செப்டெம்பர் மாதம் 2ம் திகதியன்று வவுனியா நலன்புரி முகாம்களிலிருந்து மாமன்றத்தால் பொறுப்பேற்கப்பட்ட முதியோர்கள் திருக்கேதீஸ்வரத்திலுள்ள அம்மையப்பர் முதியோர் இல்லத்தில் தங்கவைக்கப்பட்டு மாமன்றத்தால் பராமரிக்கப்பட்டு வருகிறார்கள்.

சமூகசேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சின் செயலாளரினால் அனுப்பிவைக்கப்பட்ட கடிதமொன்றில் இந்து மாமன்றத்திடம் 300 முதியோர்கள் ஒப்படைக்கப்படுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. இவர்களைப் பொறுப்பேற்பதற்காக கொழும்பிலிருந்து இந்து மாமன்ற சமூகநலன் குழுத் தலைவர் திரு. சின்னத்துரை தனபாலா தலைமையிலான மாமன்றப் பிரதிநிதிகள் வவுனியா சென்றிருந்தனர். குறிப்பிட்ட தினத்தன்று அங்கு வருகை தந்திருந்த சமூகசேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சை சேர்ந்த பணிப்பாளர் திருமதி கிருஷ்ணமூர்த்தி மற்றும் அமைச்சு அலுவலர்கள் ஊடாக 93 முதியோர்கள் மட்டுமே விடுவிக்கப்பட்டார்கள். அவர்களுள் 47 பேர் இந்து மாமன்றத்திடமும், 46 பேர் வவுனியா சிவன் கோவில் அறங்காவலர் சபையிடமும் ஒப்படைக்கப்பட்டனர். இந்து மாமன்றத்தினால் பொறுப்பேற்கப்பட்டு திருக்கேதீஸ்வரத்திலுள்ள அம்மையப்பர் முதியோர் இல்லத்தில் தங்கவைக்கப்பட்டிருப்பவர்களுள் ஒருவர் சுகயீனம் காரணமாக அண்மையில் இறந்துவிட்டார்.

முதியோர்கள் நலன்புரி முகாம்களிலிருந்து வெளியே சென்று உறவினர்களுடனும், முதியோர் இல்லங்களிலும் இணைந்து வசிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும் என்பதில் அமைச்சர் கௌரவ டக்ளஸ் தேவானந்தா பெரும் முயற்சிகள் மேற்கொண்டு வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

முதியோர்களை பொறுப்பேற்பதற்காக கொழும்பிலிருந்து வவுனியா சென்ற மாமன்றப் பிரதிநிதிகள் குழுவில், மாமன்ற சமூகநலன் குழுத் தலைவர் திரு. சின்னத்துரை தனபாலா, மாமன்ற முகாமைப் பேரவை உறுப்பினர்களான திரு. வி. நடராஜா, திரு. ரி. கிரிதரன், மாமன்ற அலுவலர்களான திரு.எம். ஸ்ரீபத்மநாதன், திரு.கோ. இளையராஜா, மற்றும், திரு. இ. இராஜ்குமார் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.


### "தெய்வத்திருமகளின் வாழ்வும் பணிகளும்"

(சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் வாழ்க்கை வரலாறு மற்றும் அவரது சமய சமூக நலப் பணிகளையும் எடுத்துச் சொல்லும் நூல் இது. அம்மையாரின் வாழ்விலிருந்து சில நிகழ்வுகள் புகைப்படங்களாகவும் இணைக்கப்பட்டுள்ளன)

**விலை :- 500/= ரூபா (தபாற் செலவு 170.00 ரூபா)**

மாமன்றத் தலைமையகத்திலும், பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்திலும் இந்நூலைப் பெற்றுக்கொள்ளலாம்

## மன்னாரில் கருத்தரங்கு

மாமன்றம், மன்னார் மாவட்ட இந்து ஆலயங்களின் ஒன்றியத்துடன் இணைந்து ஏற்பாடு செய்துள்ள சிவதொண்டர் அணி பயிற்சியும் ஆன்மீக எழுச்சிக் கருத்தரங்கும் இம்மாதம் 10ம், 11ம் திகதிகளில் மன்னார் திருக்கேதீஸ்வரம் தேவஸ்தான மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

முதலாவது நாளான 10ம் திகதி சனிக்கிழமை காலை 6.00 மணி முதல் 9.00 மணி வரை திருவாசகம் முற்றோதல் இடம்பெறும். தொடர்ந்து காலை அமர்வு மன்னார் மாவட்ட இந்து ஆலயங்களின் ஒன்றியத் தலைவர் வைத்திய கலாநிதி மு. கதிர்காமநாதன் தலைமையில் ஆரம்பமாகும். அமெரிக்கா, ஹவாய் சைவ ஆதீனத்தைச் சேர்ந்த தவத்திரு ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

மாமன்ற உபதலைவர் கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம் "எங்கள் சமயம் ஒரு வாழ்வியல் நெறி" எனும் பொருளிலும், மாமன்ற முகாமைப் பேரவை சிறப்பு உறுப்பினர் அருள்மொழியரசி வசந்தா வைத்தியநாதன் "சிவதொண்டு" எனும் பொருளிலும் சிறப்புரையாற்றுவார்கள்.

10ம் திகதி சனிக்கிழமை மாலை நிகழ்ச்சிகள் 2.00 மணிக்கு மாமன்ற உபதலைவர் விடைக்கொடிச்செல்வர் சின்னத்துரை தனபாலா தலைமையில் ஆரம்பமாகும். அகில இலங்கை கம்பன் கழக அமைப்பாளர் கம்பவாரிதி இ. ஜெயராஜ் "சிவத் திருமேனிகள்" எனும் பொருளிலும், வைத்திய கலாநிதி மு. கதிர்காமநாதன் "சிவதொண்டரின் பணிகள்" எனும் பொருளிலும் சிறப்புரையாற்றுவார்கள். மாமன்ற உதவிச் செயலாளர் திரு. ந. கார்த்திகேயன் வழங்கும் தியானப் பயிற்சி தொடர்பான விளக்கமும் செயல்முறையும் இடம்பெறும்.

இரண்டாவது நாளான 11ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை அமர்வு 9.00 மணிக்கு மாமன்ற சமய விவகாரங்கள் குழுத் தலைவர் திரு. க. ஜெகதீசன் தலைமையில் ஆரம்பமாகும். சிறப்பு நிகழ்வாக "ஐயம் தெளிதல்" கேள்வி–பதில் அரங்கு இடம்பெறவிருக்கிறது. தவத்திரு ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள், கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம், கம்பவாரிதி இ. ஜெயராஜ், அருள்மொழியரசி வித்துவான் வசந்தா வைத்தியநாதன், வைத்திய கலாநிதி மு. கதிர்காமநாதன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிப்பார்கள்.

மாமன்ற பிரதிச் செயலாளர் திரு. மு. கதிர்காமநாதன் அவர்களின் நிறைவுரையைத் தொடர்ந்து வைத்திய கலாநிதி ஆ. அரசக்கோன் வழங்கும் நன்றியுரையுடன் நிகழ்ச்சிகள் நிறைவுபெறும்.

## இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு உதவுங்கள்

வவுனியா நலன்புரி முகாம்களில் தங்கியிருக்கும் இடம்பெயர்ந்துள்ள வன்னி மக்கள் போதுமான உணவு மற்றும் உடுபுடவை போன்ற அத்தியாவசிய வசதிகள் குறைந்த நிலையில் தொடர்ந்தும் பெரும் கஷ்டத்திற்குள்ளாகி வருகின்றனர். இந்த வேளையில் அவர்களுக்கு உதவுவது இந்து மக்களாகிய எங்கள் தலையாய கடமையாகும். எனவே, அகில இலங்கை இந்து மாமன்றம் உலர் உணவுப் பொருட்கள் மற்றும் உடுப்புகளை கொழும்பு மகளிர் இந்து மன்றம், விவேகானந்த சபை உட்பட அதன் அங்கத்துவ சங்கங்களின் ஆதரவுடன் சேகரித்து இடம்பெயர்ந்துள்ள வன்னி மக்களுக்கு விநியோகித்து வருகிறது.

இதற்காக பிஸ்கட், தண்ணீர்ப் போத்தல்கள், குழந்தைகளுக்கான பால்மா வகைகள் மற்றும் புதிய உடுப்புகள், படுக்கை விரிப்பு, துவாய், சாரம், சேலை, பாதணிகள் போன்றவைகளை தொடர்ந்தும் வழங்கி உதவுமாறு சகல இந்து மக்களையும் மாமன்றம் அன்புடன் கேட்டுக் கொள்கின்றது. விரும்புவோர் நிதியுதவிகளையும் செய்யலாம்.

நலன்புரி முகாம்களில் போஷாக்கின்றி வாடும் சிறுவர்களுக்கு பீடியா சுகர் (Pedia Sure) என்ற பால்மா வகையை மருத்துவர்கள் சிபார்சு செய்திருப்பதால், இவை பெருமளவு தேவைப்படுகின்றன. இவற்றையும் வழங்கி உதவலாம்.

**நிவாரணப் பொருட்களையும், நிதியுதவியையும் பின்வரும் சேகரிப்பு நிலையங்களில் வழங்கலாம்.**

**சரஸ்வதி மண்டபம்**
75, லோறன்ஸ் வீதி, கொழும்பு–04 (தொலைபேசி : 2585975)

**கொழும்பு மகளிர் இந்து மன்றம்**
15, பகத்தல வீதி, கொழும்பு–03 (தொலைபேசி : 2505938)

**விவேகானந்த சபை**
34, விவேகானந்த மேடு, கொழும்பு–13. (தொலைபேசி : 2422646)

**நிதியுதவியை மாமன்றத்தின் வங்கிக்கணக்கிலும் வைப்புச் செய்யலாம்.**

**இலங்கை வங்கி – லேக்ஹவுஸ் கிளை**
(Bank of Ceylon - Lake House Branch)
கணக்கு இல: (A/C No:) 0003268614
Branch Code No : 636
Swift Code No : BCEYL KLX

## லண்டன் சைவ மாநாட்டில் மாமன்றப் பொதுச் செயலாளர் சொற்பொழிவு

பிரித்தானிய சைவத் திருக்கோயில்கள் ஒன்றியம் ஏற்பாடு செய்திருந்த 12வது சைவ மாநாடு செப்டெம்பர் 12ம்,13ம்திகதிகளில் லண்டன் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் ஆலயத்திலும், உயர்வாசல் குன்று முருகன் ஆலயத்திலும் நடைபெற்றது. இந்த சைவ மாநாட்டில் மாமன்றப் பொதுச் செயலாளர் திரு. கந்தையா நீலகண்டன் அவர்களும் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு சொற்பொழிவாற்றினார்.

**அகில இலங்கை இந்து மாமன்றம்**
**ALL CEYLON HINDU CONGRESS**

**To:**

**General Secretary**
All Ceylon Hindu Congress
No. 91/5, Sir Chittampalam,
A. Gardiner Mawatha,
Colombo - 02.

Telephone: 011-2434990 Fax: 011-2344720 Email: hinducongress@gmail.com Website:www.hinducongress.lk

UNIE ARTS (PVT) LTD. TEL: 0112330195